1996 ஆகஸ்ட் 2]

திரு. சி. ஞானசேகரன்: தலைவர் அவர்களே, நாங்கள் கேட்பதெல்லாம் அதாவது இந்த அவை, அதைப்போலவே நாட்டு மக்கள் கேட்க விரும்புவதெல்லாம் ஆசைத்தம்பிக்கும் முன்னாள் முதல்வருக்கும் என்ன தொடர்பு இருந்தது? ஏன் அவரிடம் ஒரு வாக்குமூலம் பெறுவதற்காக அரசு முயற்சித்தது என்று அவர்கள் அச்சப்படுகிறார்கள்? ஆகவே, இதிலே குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் ரவுடிகளை எல்லாம் உரம் போட்டு வளர்த்தவர்கள் இப்போது ஏன் பயப்படுகிறார்கள், அஞ்சுகிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு.....

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சீக்கிரம் முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: இவர்களை, இதற்காக ஒரு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொற்பொழிவு ஆற்றக் கூடாது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: ஒரே ஒரு வார்த்தை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு அனுமதி கொடுத்து இருக்கிறேன், கருத்துக்களைச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: முடித்து விடுகிறேன் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: பாதியிலே விட்டால் நன்றாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் சொல்லி முடித்தாகிவிட்டது. உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை குறித்து அதிக விளக்கங்கள் தர நான் விரும்பவில்லை. அவரவர்களே நாட்டுக்கு

தாங்கள் யார் என்பதைக் காட்டிக்கொண்டிருக்கின்றார்கள். நான், அம்மையார் அவர்களுடைய, ஜெயலலிதா அம்மையார் அவர்களுடைய அறிக்கையை வெளியிட்ட பத்திரிக்கைகளை எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏன் என்றால், அப்போது தான் அந்த உருவத்தை, அவர்களுடைய உள்ளத்தை நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள இயலும் என்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அறிக்கையை வெளியிட்டு இருக்கின்றார்கள். திரு. தாமரைக்கனி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், வெளியிலே உள்ளவர்களைப் பற்றிப் பேசலாமா என்று. வெளியிலே உள்ளவர்கள் என்றால் இந்த அவையில் அமைச்சர்களாக இருந்து, முதலமைச்சர் பொறுப்பை வகித்தவராக இருந்து, கடந்த ஆட்சிக்குச் சொந்தக்காரராக இருந்தவர்களைப் பற்றி விமர்சிப்பது தவறு அல்ல. இந்த ஆட்சியைப் பற்றி அடுத்து வருகின்ற ஒரு ஆட்சியில் விமர்சிக்கலாம். அதுதான் பாராளுமன்ற மரபு ஆகும். அது விதிமுறைக்கு விரோதமான ஒன்று அல்ல என்பதும் நிலைநாட்டப் பட்ட ஒன்றுதான்.

1992 -ஆம் ஆண்டு முதல் ஏகபோகமாக ஆதிக்கம் செலுத்தி வெறும் குற்றப்பதிவு எண்கள் மாத்திரமே குறிக்கப்பட்டு வழக்கு நிலையிலே இருந்த 2, 3 குண்டர்கள் நேற்றைக்கு முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கின்றார்கள் என்பதை அறிந்து இந்த அவையிலுள்ள எல்லாக் கட்சிகளுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் தங்களுடைய மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டார்கள். ஆனால் திரு. தாமரைக்கனி அவர்கள் பேசும்போது பாராட்டி, மேலும் உள்ள ரவுடிகளை எல்லாம் பிடிக்க வேண்டும் என்றுதான் சொன்னார். ஏதோ ஒரு வாக்குமூலம் வாங்குவதற்காக முயற்சி நடைபெற்றதாகச் சொல்லப்படுவது உண்மைக்கு மாறான தகவல். அதை நான் திட்டவட்டமாக மறுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

டி.ஜி.பி. ஓய்வு பெற்று இன்னொரு டி.ஜி.பி. பொறுப்புக்கு வந்திருக்கிறார். அவர்கள் சொல்லுவது, அதாவது ஜெயலலிதா அம்மையார் சொல்லியிருப்பது, அவர் ஏற்கெனவே *5* நாளைக்கு முன்பு அல்லது ஒரு வாரத்திற்கு முன்பே பிடிபட்டு விட்டார், அவரை இப்போது சுட்டுக் கொன்று இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கின்றார். இதை ஒரு சாதாரண நிலையிலே சாதாரண அறிவு படைத்தவர்கள் சிந்தித்துப் பார்த்தால், ஓய்வு பெற்ற டி.ஜி.பி.

1996 ஆகஸ்ட் *2*] [கலைஞர் மு. கருணாநிதி]

காலத்திலேயே அவர்கள் பிடிபட்டு இருந்தால் அந்தப் பெருமை தனக்குச் சேர வேண்டும் என்றுதான் அந்த டி.ஜி.பி. விரும்பியிருப்பாரே அல்லாமல், அதை புது டி.ஜி.பி. கையில் கொடுத்து, அந்தப் பெருமை புது டி.ஜி.பி.யாகிய இவருக்கு வரட்டும் என்று மனித இயல்பு உள்ள யாரும் எண்ணியிருக்க மாட்டார்கள். இது சாதாரண அறிவு உள்ளவர்களுக்கேகூட தெரியக்கூடிய உண்மை ஆகும். ஆனால் அம்மையார் அவர்களுடைய அறிவு சாதாரண அறிவு அல்ல, அது உச்சக் கட்ட அறிவு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் அவர்கள் இந்தக் கூற்றை வெளியிட்டு இருக்கின்றார்கள். வாக்குமூலம் வாங்குவதற்காக, வழக்குகள் ஜோடிப்பதற்காக முயன்று அதிலே தோல்வி ஏற்பட்ட காரணத்தால் சுட்டு விட்டார்கள் என்று ஜெயலலிதா அம்மையார் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நான் இந்த அவைக்குச் சொல்கின்றேன், பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அவையின் மூலமாக நாட்டுக்குச் சொல்கின்றேன், யார் இடத்திலும் வாக்குமூலம் வாங்கத் தேவையே இல்லை. இவர்களைக் கூண்டில் நிறுத்த, இருக்கிற ரெக்கார்டுகளே போதுமானது. (மேசையைத் தட்டும் ஒலி) எழுதப்பட்ட, இவர்களே கையெழுத்திட்ட ரெக்கார்டுகளே ஏராளம் இருக்கின்றன. அவைகளே போதும். யாரிடத்திலும் வாக்குமூலம் வாங்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

(ஆ) பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக எடுத்துக் கொள்ளுதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி அவர்கள் பத்திரிகைச் செய்தியை வைத்து அனுமதிக்கலாமா என்று கேட்டார்கள். அதற்கு ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். இன்று, பத்திரிகையில் வந்த செய்தியை நேற்றுப் பேசினார்கள். திரு. தாமரைக்கனி அவர்கள் கூடச் சொன்னார், 10 நாளைக்கு முன்பே பிடித்து வைத்து விட்டார்கள் என்று சொல்லுகின்றார்களே, அது உண்மையா, பொய்யா என்று தெரியாது என்று கண்ணியமாகச் சொன்னார். ஆகவே, அதை நான் இந்த அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கவில்லை. ஆனால், திட்டவட்டமாக இன்று எல்லாப் பத்திரிகைகளிலும், தலைப்புச் செய்தியாக வந்திருக்கிறது. பத்திரிகையில் வந்தது ஆதாரம் இல்லை என்று நான் எந்தக்